எம்.சி.ஓபி.எண் : 4373/2018 தேதி: 19/11/2024

எமசா : 1

பெயர் : தணேஷ் காந்த்

த/பெயர் : சோமசேகரன்

வயது : 32

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி 1ன் முதல் விசாரணை</u>**

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணியில் உள்ளேன். எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நன்கு தெரிந்து கையொப்பம் இட்டேன். எனது தரப்பு சான்று ஆவணங்கள் எமசா ஆ1 முதல் எமசா ஆ5 வரை.

**<u>மனுதாரரின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது நிறுவனத்திலிருந்து கொடுக்கப்பட்ட அதிகார கடிதத்தில் கண்டுள்ள தணேஷ்காந்த் நான் தான் என்று காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அடையாள அட்டையை காண்பித்தேன் தாக்கல் செய்யவில்லை. எனக்கு இந்த விபத்தின் புலனாய்வு விசாரணை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எவ்வாறு எல்லாம் விசாரணை செய்தார்கள் என்ற விவரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்தை ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநர் உரிமம் பற்றி நேரடியாக தெரியாது கோப்புகளின் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான். கோப்புகளின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொல்லியுள்ளேன் அதற்கான ஆதாரமாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. ஓட்டுநர் உரிமம் உள்ளதா இல்லையா என்ற முபவிவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முறையான புலன் விசாரணை செய்யாமல் இந்த வழக்கிற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த விவரம் நேரடியாக தெரியாத

காரணத்தினால் எனது சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. காப்பீடு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.